# OUR LADY OF GOOD HEALTH PARISH
# தூய ஆரோக்கிய அன்னைப் பங்கு

**131 Birchmount Road, Scarborough, ON M1N 3J7**
416-264-OLGH (6544) : **Phone**
416-264-6545 : **Fax**
office@olghtamilparish.com : **Email**
www.olghtamilparish.com : **Website**


**01/04/2022**



என் அன்பான தூய ஆரோக்கிய அன்னை பங்கு மக்களே,

உங்கள் அனைவரையும் செபத்தோடு கூடிய புது வருட வாழ்த்துக்களும் ஆசிகளும் கூறி, இந்த அன்பு மடல் மூலம் தொடர்பு கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த சில நாட்களாக மிக வேகமாக அதிகரித்து வரும் புதுவகை ஒமிக்ரோன் (Omicron) வைரசின் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், ஒன்ராரியோ அரசாங்கம் புதிய நடைமுறைகளை இவ்வாரம் அறிவித்திருப்பதை நீங்கள் அறிவீர்கள். இப்புதிய அறிவித்தலின்படி, ஒன்ராரியோ மாகாணம், மீளவும் Stage 2 என்ற இரண்டாம் கட்ட கட்டுப்பாடுகளின் கீழ், நாளை புதன்கிழமை, ஜனவரி 5ம் திகதி அதிகாலையிலிருந்து கொண்டுவரப்படுகிறது. இந்த நடைமுறை, தொடரும் 21 நாட்களுக்கு தற்போது நீடிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே நடைமுறையிலுள்ள முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல் போன்றவற்றுடன், தற்போது அலுவலக ஊழியர்கள் அனைவரும் வீட்டிலிருந்து வேலை செய்வது, எதுவித சந்திப்புக்களாக இருந்தாலும் ஆகக்கூடியது 5 பேர் மட்டுமே கலந்துகொள்வது போன்றவையும் நடைமுறைக்கு வந்துள்ளன.

ஒமிக்ரோன் வைரசின் வேகமான பரவலிலிருந்து எமது பங்குமக்களாகிய உங்களையும் பாதுகாப்பது எமது கடமை. குருக்களாகிய நாமும், எமது பங்கின் அனைத்து பங்குமக்களும் இந்த நோய்ப்பரவலிலிருந்து எம்மைப் பாதுகாத்து, உடல்நலத்துடன் வாழ, எமக்கு நாமே ஒருவருக்கு ஒருவர் உதவ வேண்டும் என்ற அன்பான வேண்டுகோளை மிகுந்த அக்கறையுடனும் அன்புடனும் பகிர்ந்து கொள்கிறேன்.

எமது ஆலயத்தில் தொடர்ந்தும் வழிபாடுகள் வழமையான நேரங்களில் நடைபெறும் அதேவேளை, சில மேலதிக கட்டுப்பாடுகளை மேற்கொள்வது எமது உடல்நலத்திற்கும் பாதுகாப்பிற்கும் உதவியாக இருக்கும்.

1. ஆலயத்தின் ஆசனங்களில் போடப்பட்டிருக்கும் இலக்கங்களைக் கவனத்தில் கொள்ளுங்கள். ஒரு இலக்கத்திலுள்ள ஆசனத்தின் பகுதியில், ஒரே முகவரியில் வாழ்கின்ற மூன்று (3) பேர் மட்டுமே அமரலாம். ஒரே முகவரியில் வாழும் நால்வர் அல்லது ஐந்து பேராக இருந்தால், மூவர் ஒரு இலக்கத்திலும், மீதியானோர் இன்னுமொரு இலக்கத்திலுமே அமர அனுமதிக்கப்படுவர். ஒரு ஆசனமாக இருந்தாலும், இரு இலக்கங்களுக்கு இடையில் இருப்பவர்கள், போதிய சமூக இடைவெளியைப் பேணுவது அவசியம்.
2. முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை என்ற வகையில், ஆலயத்தின் இடங்கள் அனைத்தும் நிரம்பும் பட்சத்தில், ஏனையவர்களுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.
3. ஆலயத்தின் கீழ் மண்டபம் தற்போதிருந்து மறு அறிவித்தல்வரை மூடப்பட்டிருக்கும். எதுவித சந்திப்புக்களோ வழிபாடுகளோ கீழ் மண்டபத்தில் (Church Hall) நடைபெறாது.
4. ஆலயத்தில் நடைபெறும் வழிபாடுகளுக்கு, பாடகர் ஒருவரும், இசைக் கருவி மீட்டுபவர் ஒருவரும் அனுமதிக்கப்படுவர். மறு அறிவித்தல்வரை ஒன்றிற்கு மேற்பட்ட பாடகர்கள் ஆலயத்தின் பின்மாடிப் பகுதிக்கு (Balcony) செல்வது தடைசெய்யப்படுகிறது.
5. எந்தவித ஆலய வழிபாடு குறித்த தேவைகளுக்கும் தயவுசெய்து ஆலயத்தை தொலைபேசியில் அழைத்து முன்பதிவை மேற்கொள்ளுங்கள். தொலைபேசியில் தகவல் பதிவு செய்யும்போது, தயவுசெய்து உங்கள் பெயரையும் தொலைபேசி இலக்கத்தையும் பதிவு செய்ய மறக்காதீர்கள்.
6. ஆலய வழிபாடுகள் அனைத்தும், தொடர்ந்தும் இணையவழி ஊடாக எமது முகநூல், வலைஒளி, இணையத்தளம் மற்றும் OLGH TV தொலைக்காட்சி சேவை வழியாக நேரடியாக எடுத்து வரப்படும்.
7. எமது ஆலயத்தில், முகக்கவசம் அணிவது, சமூக இடைவெளியைப் பேணுவது, ஆலயத்திற்குள் அனுமதிப்பது, ஆசனங்களில் சமூகஇடைவெளியை உறுதி செய்வது, சுத்தப்படுத்துவது போன்ற பல்வேறு அவசியமான பணிகளில் தொண்டர்களாகப் பணியாற்றும் எமது பங்கின் உதவியாளர்களுக்கு தயவுசெய்து உங்களது முழுமையான ஒத்துழைப்பை வழங்கி, அவர்களது அறிவுறுத்தல்களும் ஆலோசனைகளும், பங்கு மக்களின் ஆரோக்கியத்தை உறுதி செய்வதற்கே என்பதை மனதில் நிறுத்தி, இறையன்புடனும் சகோதர பாசத்துடனும் ஒன்றாய் இணைந்து பயணித்து, வளமாக வாழ வாஞ்சையுடன் பயணிப்போம்.

நீங்கள் தொடர்ந்து வழங்கிவரும் முழுமையான ஆதரவுக்கும் அன்புக்கும் உதவிகளுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். பிறந்திருக்கும் பாலகயேசு உங்கள் உள்ளங்களையும் இல்லங்களையும் நிறைவாக ஆசீர்வதித்து, தற்போதைய நோய்ப்பரவலிலிருந்து உங்களையும் உங்கள் குடும்பத்தினர் உறவினர் நண்பர்கள் மற்றும் அனைத்து மக்களையும் தன் செட்டையின்கீழ் வைத்துப் பாதுகாக்க வேண்டுமென தினமும் எமது திருப்பலியில் உங்களுக்காக மன்றாடுகிறோம்.

இறை இயேசுவின் ஆசியும் வாழ்த்துக்களும் கூறி நிற்கும்,
உங்கள் பணியாளன்,

**அருட்பணி சாள்ஸ் கொலின்ஸ்**
**பங்குத்தந்தை, தூய ஆரோக்கிய அன்னை தமிழ்ப் பங்கு**

தொலைபேசி: 416-264-6544
மின்னஞ்சல்: office@olghtamilparish.com
இணையத்தளம்: www.olghtamilparish.com
முகநூல்: https://www.facebook.com/OLGHTamilParish
வலைஒளி: https://www.youtube.com/olghtamilparish